**அக்டோபர் – 04**

# TNPSC துளிகள்

- ஆந்திரப் பிரதேச சுற்றுலாத் துறையானது, அம்மாநிலத்தினை இந்தியாவின் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றியதற்கு ஆற்றிய அதன் பங்களிப்புகளுக்காக 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சுற்றுலா விருதைப் பெற்றது.
- ஆரோக்கியம், நெறிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான தாவர அடிப்படையிலான உணவு முறைகளை ஊக்குவிப்பதற்காக அக்டோபர் 01 ஆம் தேதியன்று உலக சைவ தினம் கொண்டாடப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## பருப்பு வகைகளில் தன்னிறைவு பெறுதலுக்கான திட்டம்




- 11,440 கோடி ரூபாய் மொத்த செலவில் பருப்பு வகைகளில் தன்னிறைவு பெறச் செய்வதற்கான ஆறு ஆண்டு காலத் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- 2030–31 ஆம் ஆண்டிற்குள் 350 லட்சம் டன் பருப்பு வகைகளை உற்பத்தி செய்து 310 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பருப்பு உற்பத்தியினை பரப்புவதே இத்திட்டத்தின் இலக்காகும்.
- பிரதான் மந்திரி அன்னதாதா ஆய் சன்ரக்சன் அபியான் (PM-AASHA) திட்டத்தின் விலை ஆதரவு திட்டத்தின் (PSS) கீழ் துவரை பருப்பு, உளுந்து மற்றும் மைசூர் பருப்பு ஆகியவற்றின் முழு கொள்முதல் ஆனது மேற்கொள்ளப்படும்.
- மொத்தம் 126 லட்சம் குவிண்டால் அளவிலான சான்றளிக்கப்பட்ட விதைகளும் 88 லட்சம் இலவச விதைப் பெட்டிகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.
- ஓர் அலகிற்கு 25 லட்சம் ரூபாய் வரையிலான மானியத்துடன் 1000 அறுவடைக்குப்

பிந்தைய பதப்படுத்துதல்/செயலாக்க அலகுகள் நிறுவப்படும்.

## மெய்நிகர் மனநலத் தொடர்




- மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (AIIMS) ஆகியவை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 04 முதல் 10 ஆம் தேதி வரை மெய்நிகர் மனநலத் தொடரை நடத்த உள்ளன.
- இந்தத் திட்டமானது, CBSE வாரியத்துடன் இணைக்கப்பட்டப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், ஆலோசகர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்டு அவர்களின் மன நலனை மேம்படுத்துவதையும், மன நலம் தொடர்பாக நிலவும் தவறான கருத்துகளைக் குறைப்பதையும் இலக்காக நிர்ணயித்து உள்ளது.
- உளவியல் ரீதியான மீள்தன்மையை உருவாக்குவதையும் கல்வி சார்ந்து எழும் மன அழுத்தத்தை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ள இந்தத் தொடரானது அக்டோபர் 10 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் உலக மனநல தினத்தன்று முடிவடைகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பு சபை



- கனடாவின் மாண்ட்ரியல் நகரில் நடைபெற்ற 42வது கூட்டத்தின் போது, சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) சபையின் இரண்டாம் பிரிவிற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இரண்டாம் பிரிவானது, சர்வதேச பொது விமான வழிசெலுத்தல் வசதிகளுக்கு குறிப்பிடத் தக்கப் பங்களிப்பை வழங்கும் நாடுகளை உள்ளடக்கியது.
- 1944 ஆம் ஆண்டு முதல் ICAO சபையில் தொடர் உறுப்பினராக இருந்து வருகின்ற இந்தியா, உலகளாவிய விமானப் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் நிலைத் தன்மைக்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## பண வழங்கீட்டு ஒழுங்குமுறை வாரியம்




- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2025 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியன்று கட்டண ஒழுங்குமுறை வாரியத்தினை உருவாக்கியது.
- இது முந்தையப் பண வழங்கீட்டு மற்றும் தீர்வு அமைப்புகளின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைக்கான வாரியத்திற்கு மாற்றாக அமைகிறது.
- RBI ஆளுநரின் தலைமையில் செயல்படும் இந்த வாரியமானது பண வழங்கீட்டு மற்றும் தீர்வு அமைப்புகளுக்கானப் பொறுப்பினைக் கொண்டுள்ள துணை ஆளுநர் மற்றும் நிர்வாக இயக்குநரை உள்ளடக்கியது.
- இந்த வாரியமானது அனைத்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டு, மின்னணு மற்றும் மின்னணு அமைப்புகள் சாராதப் பண வழங்கீட்டு முறைகளை ஒழுங்குப் படுத்தச் செய்வதற்கும் மேற்பார்வையிடுவதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் தனியார் துறை ஹெலிகாப்டர் ஒருங்குசேர்ப்பு பிரிவு




- டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் (TASL) நிறுவனமானது, கர்நாடகாவின் வேமகல் பகுதியில் இந்தியாவின் முதல் தனியார் துறை ஹெலிகாப்டர் இறுதி கட்ட ஒருங்குசேர்ப்பு வசதியினை நிறுவ உள்ளது.
- இந்தப் பிரிவானது ஏர்பஸ் H125 ஹெலிகாப்டரை தயாரிக்கும்.
- இது பொது மற்றும் பொது தனியார் என இரு துறைகளையும் சார்ந்த சந்தைகளின் வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில், இந்திய ஆயுதப்படைகளின் குறிப்பாக இமயமலைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்காக இலகுரக பல் பயன்பாட்டு ஹெலிகாப்டருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும்.
- இந்த வசதியானது, உயர் மட்ட அளவிலான உள்நாட்டு உற்பத்திக் கூறுகள் மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடிய H125M ஹெலிகாப்டரின் இராணுவப் பயன்பாட்டு வடிவினைத் தயாரிக்கும்.
- தெற்காசியா முழுவதும் ஹெலிகாப்டர்களை ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்களுடன், 'இந்தியாவில் தயாரிக்கப்பட்ட' H125 ஹெலிகாப்டரின் முதல் விநியோகமானது, 2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது TASL நிறுவனத்தினை, ஹெலிகாப்டர்களைத் தயாரிக்கும் இந்தியாவின் முதல் தனியார் நிறுவனமாக மாற்றுகிறது என்பதோடு மேலும் இது குஜராத்தில் உள்ள C295 இராணுவ விமானங்களுக்கான அதன் தற்போதைய வான் வழி வாகன ஒருங்குசேர்ப்பு தொடரைப் பூர்த்தி செய்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## தற்கொலைகள் குறித்த NCRB அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டு தேசியக் குற்றப் பதிவு வாரியத்தின் (NCRB) அறிக்கையானது, நோய்களால் ஏற்படும் தற்கொலைகளில் 3.2 சதவீதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக

குறிப்பிடுகிறது என்ற நிலையில் 2022 ஆம் ஆண்டில் 31,484 ஆக இருந்த இது 2023 ஆம் ஆண்டில் 32,503 ஆக அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் தற்கொலைக்கான இரண்டாவது முக்கியக் காரணம் நோய்வாய்ப்பட்ட நிலையாகும்.
- மொத்தத் தற்கொலைகளில் 32% என்ற பங்கினைக் கொண்ட குடும்பப் பிரச்சினைகளுக்கு அடுத்தபடியாக இது 19 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- மனநோய் காரணமாக ஏற்படும் தற்கொலைகள் ஆனது நோய்கள் காரணமான தற்கொலைகளின் பிரிவின் கீழ் 13,978 வழக்குகள் என்ற எண்ணிக்கையில் அதிகமாக இருந்தன.
- 2022 ஆம் ஆண்டில் 1,251 ஆக இருந்த புற்றுநோய் காரணமாக ஏற்படும் தற்கொலைகள் ஆனது 2023 ஆம் ஆண்டில் 14 சதவீதம் அதிகரித்து 1,428 ஆக உள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில், தேசிய அளவிலான மொத்தத் தற்கொலைகளில் 21 சதவீதத்துடன் நோய் காரணமான அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் பதிவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவில் 12 சதவீதமும் கர்நாடகாவில் 10 சதவீதமும் பதிவாகியுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் மாரடைப்பு தொடர்பான திடீர் உயிரிழப்புகளில் 10 சதவீதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது என்பதோடு 2022 ஆம் ஆண்டில் 32,457 ஆக இருந்த இது 2023 ஆம் ஆண்டில் 35,715 ஆக அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 56,450 ஆக இருந்த மொத்த திடீர் உயிரிழப்புகள் ஆனது 2023 ஆம் ஆண்டில் 13 சதவீதம் அதிகரித்து 63,643 ஆக உள்ளது, இது 45 முதல் 60 வயதிற்கு உட்பட்டவர்களில் (34 சதவீதம்) அதிக அளவில் பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், மொத்தம் 1,131 கருத்தரிப்பு தொடர்பான உயிரிழப்புகளுள் 80 ஆக இருந்த கருக்கலைப்பு காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் ஆனது சுமார் 59 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் 127 ஆக உயர்ந்துள்ளது.
- NCRB அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டில் சுமார் 1,073 ஆக இருந்த கர்ப்ப காலத்தில் பெண்களின் உயிரிழப்புகள் 5.4 சதவீதம் அதிகரித்து, 2023 ஆம் ஆண்டில் 1,131 ஆக அதிகரித்துள்ளது.





## சாலை விபத்துகள் காரணமான உயிரிழப்புகள் குறித்த NCRB அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் 4,64,029 சாலை விபத்துகள் காரணமாக

மொத்தம் 1,73,826 பேர் உயிரிழந்தனர்.

- 2022 ஆம் ஆண்டில் 1,71,100 ஆக இருந்த உயிரிழப்புகளின் எண்ணிக்கையில் 2,726 அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- அதிக வேகம் காரணமாக 1,01,841 என்ற எண்ணிக்கையிலான 58.6 சதவீத உயிரிழப்புகள் ஏற்பட்டன.
- மொத்த உயிரிழப்புகளில் இரு சக்கர வாகன ஓட்டிகளின் எண்ணிக்கை 79,533 அல்லது 45.8 சதவீதமாகும்.
- தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசத்தில் இரு சக்கர வாகன ஓட்டிகளின் உயிரிழப்புகள் ஆனது 11,490 மற்றும் 8,370 என்ற அதிக எண்ணிக்கையில் பதிவாகி உள்ளன.
- தேசிய நெடுஞ்சாலைகளில் 60,127 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இது மொத்த சாலை விபத்து காரணமான உயிரிழப்புகளில் 34.6 சதவீதமாகும்.




| Year | Total Traffic Accidents | Road Accidents | Rail Accidents | Rail Crossing Accidents |
|---|---|---|---|---|
| 2019 | 1.8 lakh | 1.5 lakh | 24,619 | 1,762 |
| 2020 | 1.5 lakh | 1.3 lakh | 11,968 | 1,185 |
| 2021 | 1.7 lakh | 1.6 lakh | 16,431 | 1,807 |
| 2022 | 1.94 lakh | 1.7 lakh | 20,792 | 2,455 |
| 2023 | 1.98 lakh | 1.7 lakh | 21,803 | 2,242 |

*Excludes deaths due to natural causes; **Source: NCRB**

# மாநிலச் செய்திகள்


## இந்தியாவின் குழந்தை திருமண முறையில்லா மாவட்டம்



- 'குழந்தை திருமண முறையிலா இந்தியா' பிரச்சாரம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இந்தப் பிரச்சாரத்தின் கீழ் சத்தீஸ்கரில் உள்ள பலோட் மாவட்டம் நாட்டின் முதல் குழந்தை திருமண முறையிலா மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த மாவட்டத்தில் எந்த குழந்தை திருமண வழக்குகளும் பதிவாகவில்லை என்ற நிலையில் இது சட்ட மற்றும் ஆவணச் சரி பார்ப்புகள் மூலம் சரி பார்க்கப்பட்டது.
- சத்தீஸ்கர் மாநில அரசானது, 2028–2029 ஆம் ஆண்டிற்குள் முழு மாநிலத்தையும் குழந்தை திருமண முறையிலா மாநிலமாக அறிவிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## தெலுங்கு மொழி தினம் 2025 – ஆகஸ்ட் 29




- இத்தினமானது, தெலுங்கு மொழியியலாளர் மற்றும் சீர்திருத்தவாதி கிடுகு வெங்கட இராமமூர்த்தி அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இந்தியாவின் ஆறு செம்மொழிகளில் ஒன்றான தெலுங்கு, இலக்கிய மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.
- இது ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் யானம் ஒன்றியப் பிரதேசத்தில் பிரதானமாகப் பேசப்படுகிறது.
- இந்த மொழியானது அதன் மென்மையான ஒலிக்காக பெரும்பாலும் "கிழக்கின் இத்தாலிய மொழி" என்று அழைக்கப்படுகிறது.
- 75 மில்லியனுக்கும் அதிகமான பேச்சாளர்களைக் கொண்ட தெலுங்கு, திராவிட மொழி குடும்பத்தின் மிகப்பெரிய அங்கம் ஆகும்.


## சர்வதேச காபி தினம் 2025 - அக்டோபர் 01

- இது 2014 ஆம் ஆண்டில் சர்வதேச காபி அமைப்பினால் (ICO) நிறுவப்பட்டது.
- முதல் அதிகாரப்பூர்வக் கொண்டாட்டமானது இத்தாலியின் மிலனில் நடைபெற்ற 2015 ஆம் ஆண்டு கண்காட்சியின் போது நடத்தப்பட்டது.

- காபி கலாச்சாரத்தைக் கொண்டாடுவதையும் காபி விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Embrace Collaboration For Collective Action – More Than Ever" என்பதாகும்.
- பிரேசில் நாடானது, உலகின் மிகப்பெரிய காபி உற்பத்தியாளராக உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து வியட்நாம் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகள் உள்ளன.
- உலகளாவிய காபி உற்பத்தியில் பயன்படுத்தப் படும் இரண்டு முக்கிய இனங்கள் அராபிகா மற்றும் ரோபஸ்டா ஆகியனவாகும்.





## சர்வதேச முதியோர் தினம் 2025 - அக்டோபர் 01




- இது முதியோர்களின் பங்களிப்புகளைக் கௌரவிப்பதையும் அவர்களின் உரிமைகள், கண்ணியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- இத்தினம் முதன்முதலில் 1990 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையால் அறிவிக்கப் பட்டது.
- இது முதன்முதலில் 1991 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Older Persons Driving Local and Global Action: Our Aspirations, Our Well-Being and Our Rights" என்பதாகும்.

## சர்வதேச அகிம்சை தினம் 2025 - அக்டோபர் 02




- அக்டோபர் 02 ஆம் தேதியானது இந்தியாவில் காந்தி ஜெயந்தியாகவும், உலகளவில் சர்வதேச அகிம்சை தினமாகவும் கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2007 ஆம் ஆண்டில் இந்த நாளைக் கடைபிடிப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.
- காந்தியின் "அகிம்சா" (அகிம்சை) கொள்கையானது உலகளாவிய இயக்கங்களைத் தொடர்ந்து ஊக்குவிக்கிறது.
- இது கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு மூலம் அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் புரிதலை ஊக்குவிக்கும் தினமாகும்.

# இதரச் செய்திகள்

## RSS அமைப்பின் 100 ஆம் ஆண்டு நிறைவு

- இராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தின் (RSS) நூற்றாண்டு விழாவில் பிரதமர் 100 ரூபாய் நாணயம் மற்றும் நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டார்.
- 100 ரூபாய் நாணயத்தில் ஒரு புறம் வரத முத்திரை கொண்ட பாரதத் தாய், ஒரு சிங்கம், மற்றும் சுயம்சேவகர்கள் அதற்கு மரியாதை செலுத்தும் வகையிலான உருவமும், மற்றொரு புறத்தில் தேசியச் சின்னமும் இடம்பெற்றுள்ளது.

- இந்த நாணயத்தில், சங்கத்தின் வழிகாட்டும் முழக்கமான "இராஷ்ட்ராய ஸ்வாஹா, இடாம் இராஷ்ட்ராய, இடாம் ந மமா" என்பது இடம் பெற்றிருந்தது.
- சுதந்திரம் பெற்றதிலிருந்து, இந்திய நாணயத்தில் பாரதத் தாயின் உருவம் சித்தரிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- RSS அமைப்பானது, 1925 ஆம் ஆண்டில் விஜயதசமி நாளில் டாக்டர் கேசவ் பலிராம் ஹெட்கேவரால் நாக்பூரில் நிறுவப்பட்டது.
- சமூக நல்லிணக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தேசிய ஒற்றுமையைப் பாதுகாத்தல் போன்ற தற்போதையச் சவால்களை எதிர்கொள்வதே RSS அமைப்பின் பஞ்ச பரிவர்த்தன் (ஐந்து மாற்றங்கள்) கட்டமைப்பின் நோக்கமாகும்.




## ஹுருன் இந்தியா அமைப்பின் செல்வந்தர்கள் பட்டியல் 2025




- பில்லியனர்களில், 9.55 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களுடன் அம்பானி முன்னிலை வகிக்கிறார் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து 8.14 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களுடன் கௌதம் அதானி இரண்டாவது இடத்தில் உள்ளார்.
- ஷாருக்கான் (59) 12,490 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களுடன் முதல் முறையாக பில்லியனர் பட்டியலில் இணைந்துள்ளார்.
- செயற்கை நுண்ணறிவினை மையமாகக் கொண்ட பெர்ப்ளெக்ஸிட்டி நிறுவனத்தின்

நிறுவனரான சென்னையில் பிறந்த அரவிந்த் ஸ்ரீனிவாஸ் (31), 21,190 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களுடன் முதல் முறையாக இப்பட்டியலில் இணைந்துள்ளார்.

- இதன் மூலம் இவர் இப்பட்டியலில் இணைந்த இளம் பில்லியனர் (செல்வந்தர்) என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- HCL குழுமத்தைச் சேர்ந்த ரோஷ்னி நாடார் முதல் 10 இடங்களில் இடம் பெற்ற இளம் நபராவார்.
- 2025 ஆம் ஆண்டு செல்வந்தர்கள்/பணக்காரர்கள் பட்டியலில் இடம் பெற்று உள்ளவர்களின் மொத்த சொத்து மதிப்பு 167 லட்சம் கோடி ரூபாய் ஆகும் என்பதோடு இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதியளவாகும்.
- மும்பை நகரானது 451 சேர்க்கைகளுடன் செல்வந்தர்களின் தலைநகராகத் தொடர்ந்து திகழ்கிறது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பெங்களூரு (116), ஐதராபாத் (102), சென்னை (94) மற்றும் புனே (66) ஆகியவை உள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★